22nd November 1963]

திரு. க. ர. நல்லசிவம் : வீட்டு வசதி போர்டார் நிலங்களை குறைந்த விலைக்கு ஆர்ஜிதம் செய்து அதிக விலைக்கு வீடு கேட்டவர்களுக்குக் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறதே, இது உண்மை தானு ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் சொல்லுகிறபடிதான் இருக்கமுடியும். ஏன் என்றுல் வீடுகள் கட்டுவதற்கு உதவாக்கரையாக இருக்கும் நிலங்கள் எல்லாவற்றையும் எடுத்து, செலவழித்து நல்ல நிலமாகச் சீர்திருத்தி, அமினிட்டீஸ் எல்லாம் செய்து, ரோடு போட்டு, லைட் போட்டு, வாட்டர்-சப்ளை எல்லாம் போட்டு, ஸுயஜ் போட்டு பிறகு கொடுக்கும்போது விலை கொஞ்சம் அதிகமாகத்தான் இருக்கும்.

Police Out-post, Perumbalai

* 483 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Home be pleased to state with reference to Question No. 1053 answered on 1st November 1962—

(*a*) whether the Government have received any request from the Inspector-General of Police for the conversion of the Perumbalai Police Out-post into a regular Police Station; and

(*b*) if so, the action taken thereon?

கனம் திரு. பூ. கக்கன் : *(அ)* இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note*.—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—REQUEST FOR A HALF-HOUR DEBATE.

திரு. ப. உ. சண்முகம் : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, மன்ற விதிகளின் 40-வது விதியின்படி, தங்களை நான் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்வது இது ஆகும்.

இன்றைக்கு பதிலளிக்கப்பட்ட கேள்விகளுக்குள் 464-வது கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது உண்மைக்கு நேர்மாறுனதைக் குறிப்பிட்டார்கள். அந்த நேரத்தில் நான் குறுக்கிட்டு கேள்வி நேரத்தை வீணுக்க விரும்பவில்லை. பின்னுல் இதைப் பற்றி விவாதிக்கலாம் என்று, இறுதியில் வேண்டிக் கேட்டுக் கொள்ளலாம் என்று இருந்தேன். உண்மைக்கு நேர்மாறுக அமைச்சர் அவர்கள் பதில் அளித்த காரணத்தினுல், இதைப் பற்றி ½ மணி விவாதத்திற்கு நேரம் ஒதுக்கி விவாதிக்க ஒப்பம் அளிக்க வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The point is this. If the answer given is not satisfactory and a half-hour discussion is desired, then hon. Members must put questions and elicit information. They may afterwards say that the answer given was not satisfactory and so

they require a half-hour discussion. But at the time the question was answered by the Hon. Minister, the hon. Member Sri P. U. Shanmugam kept quiet and now makes a request for allowing a half-hour debate. Keeping quiet at that time would not give room for making such a request now.

Sri MUNU ADHI : We all raised our hands. The Hon. Speaker did not notice it.

Mr. SPEAKER : Certainly not. The hon. Member is sitting so near me. There is no use of accusing me and making a complaint like that.

Sri MUNU ADHI : I am not accusing, Sir.

Mr. SPEAKER : The hon. Member should not say like that. Hon. Members must put questions and try to elicit information. Without doing that, what is the use of making a request for half-hour discussion afterwards?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, அப்படி உப கேள்வி கேட்கவேண்டுமானால் மறுபடியும் கேட்கலாம். இன்னொரு கேள்விக்கு போன பிறகு, கூட எழுந்து இந்தக் கேள்வியில் உப கேள்வி போடவேண்டுமென்று கேட்கலாம். இன்னொரு கேள்விக்கு பாஸ் பண்ணிய பிறகும் உப-கேள்வி கேட்கிறார்கள்— நீங்களும் அனுமதிக்கிறீர்கள். கேள்வி கேட்க இடம் கொடுக்கவில்லை என்று சொல்லுவதற்கில்லை. உப-கேள்வியே கேட்காதபோது ½ மணி நேர விவாதம் வேண்டுமென்று கேட்பது சரியல்ல.

Sri K. A. MATHIALAGAN : There have been cases in this same Assembly where after the answer to the main question was given, half-hour discussion was then taken up. The Speaker had allowed it.

Mr. SPEAKER : I agree with the hon. Member's contention. For that, hon. Members must put questions and elicit answers. Yesterday some question was put and answered. I was not satisfied with it and I did tell Government should make further enquiries. In the same manner, hon. Members must first put questions and then if they are not satisfied with the answers, then they must request for half-hour discussion. That is the rule. But the hon. Member Sri P. U. Shanmugam kept quiet, when the question was answered. He is now making a request for a half-hour discussion. As I said earlier, hon. Members must put questions, get clarifications and if they are not satisfied with the answers, and some probe is required in the matter, then they may ask for a half-hour discussion. I am not against it. If hon. Members keep quiet then and ask now for a half-hour discussion, it is not correct.

Sri K. A. MATHIALAGAN : My point is, there have been occasions when after the main question was answered. . .

Sri K. T. KOSALRAM rose . . .

22nd November 1963]

MR. SPEAKER : The hon. Member Sri K. T. Kosalram may say what he wants to say.

திரு. கே. டி. கோசல்ராம் : என்னுடைய கேள்விக்கு கனம் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் ஒரு சர்க்காருக்கு மற்றொரு சர்க்கார் எழுத முடியாது, சிபாரிசு செய்ய முடியாது என்றும், இந்திய சர்க்காருக்கு இந்த சர்க்கார் சிபாரிசு செய்ய முடியாது என்று அது ஏதோ அன்னிய சர்க்கார் மாதிரி பதில் சொன்னார்கள். என்னுடைய கேள்விக்குச் சரியாக பதில் சொல்லாத காரணத்தினல் அதைப் பற்றி விவாதிக்க ½ மணி நேர விவாதத்திற்கு இடம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த சர்க்கார் இன்னொரு சர்க்காருக்கு சிபாரிசு செய்வதில்லை என்றுதான் சொன்னார்கள். இதற்கு ஒரு அரை மணி நேர விவாதம் என்றால் எனக்கு ஒன்றும் புரியவில்லை.

MR. SPEAKER : Request for a half-hour discussion has now become contagious. I want to put an end to that.

III.—ANNOUNCEMENTS.

(I) ARREST OF A MEMBER AND RELEASE OF MEMBERS

MR. SPEAKER : I have to announce to the House that I have received a communication from the Inspector-General of Police, Madras, on 21st November 1963 that the Salem district police have arrested Sri R. Nallamuthu, M.L.A. of Nallasamudram on 21st November 1963 at Tiruchengode, under section 151, Criminal Procedure Code.

I have also to announce to the House that I have received a message at 10-00 p.m. yesterday, from the Superintendent of Police, Salem, that Sri Sriramulu and Sri R. Nallamuthu, M.L.As. have been released.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இப்படி சட்ட மன்ற உறுப்பினர்கள் திடீரென்று கைது செய்யப்படுவதற்கும், திடீரென்று விடுதலை செய்யப்படுவதற்கும் என்ன காரணம் ?

* **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, நான் முன்பே கூறினேன். சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும், வேறு எந்த பொறுப்பு வகிக்கின்றவர்களாக இருந்தாலும், போலீஸாரைப் பொறுத்தமட்டில் அவர்கள் பொறுப்பை அவர்கள் வகிக்கவேண்டும். சட்டத்தை மீறக்கூடியவர்களாக இருந்தால், அமைதிக்கு குந்தகம் விளைவிக்கக்கூடியவர்களாக இருந்தால், போலீஸார் சட்டப்படி தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவது அவர்களுடைய கடமையும், பொறுப்புமாகும். அந்த வகையிலே போலீஸார் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள், கனம் அங்கத்தினர்கள் சிலர் கைது செய்யப்பட்டிருப்பதுபற்றிகூட, அவர்கள் சட்டத்தை மீறுவதிலே அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள், மீறுவதாக கூறிக்